# நல்ல பழங்கள்

கி. வா. ஜகந்நாதன்




அமுத நிலையம்

# நாலு பழங்கள்

(சிறுவர் கதைகள்)

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் லிமிடெட்
46, ராயப்பேட்டை ஹைரோடு
சென்னை-600 014

உரிமை பதிவு :
அமுதம் : 264
முதற் பதிப்பு :- மார்ச்சு 1981

விலை ரூ : 2-00

ஸ்ரீநிவாசா பவர் பிரஸ், 145. கச்சேரி ரோடு
மயிலாப்பூர், சென்னை-4.

# முன்னுரை

குழந்தைகளுக்குக் கதை சொல்லுவதென்பது எல்லா நாடுகளிலும் உள்ள வழக்கம். வயசான மூதாட்டிகளும், கிழவர்களும் தம் பேரன் பேத்திகளுக்குக் கதை சொல்லி உற்சாகப்படுத்தி வருவார்கள். அதனுல் அந்த முதியவர்களுக்கும் மகிழ்ச்சி; குழந்தைகளுக்கும் கொண்டாட்டம். குழந்தைகளின் கதைகளில் அதிசயங்களும், அற்புதங்களும் இருந்தால் அவற்றை அவர்கள் நன்ருக ரசிப்பார்கள். ''அப்படிச் செய்ய முடியுமா? அது இயற்கைக்கு விரோதம் அல்லவா?'' என்று கேட்கமாட்டார்கள். உலகில் உள்ள மொழிகளில் குழந்தைகளுக்காகவே வழங்கும் மோகினிக் கதைகளும், உவமைக் கதைகளும் உள்ளன. தமிழிலும் பல காலமாக வழங்கி வரும் நாடோடிக் கதைகளில் குழந்தைகளுக்கு உரியவையும் உண்டு.

இந்தச் சிறிய புத்தகத்தில் நானுகக் கற்பனை செய்து அமைத்த கதைகளும் பழைய நாடோடிக் கதைகளைத் தழுவிய கதைகளும் உள்ளன. நாமும் குழந்தையாக இருந்திருப்பதனுல் குழந்தைகளின் உள்ளத்தை நம்மால் அறிய முடிகிறது.

இந்த வகையில் வேறு சில கதைப் புத்தகங்களையும் வெளியிடலாம் என்று எண்ணியிருக்கிறேன்.

'காந்தமலை'
சென்னை–28

கி. வா. ஜகந்நாதன்
7—3—81

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நாலு பழங்கள் | 1 |
| 2. | வீமனுக்கு இட்ட வேலை | 7 |
| 3. | பசித்த முனிவர் | 11 |
| 4. | என்ன தண்டனை கொடுப்பது? | 16 |
| 5. | குழந்தையும் திருடர்களும் | 21 |
| 6. | நாக மாணிக்கம் | 26 |
| 7. | அதிசயப் பெண் | 32 |
| 8. | டபீர் ஸ்வாமி | 39 |
| 9. | அரசகுமாரன் சோதனை | 47 |



# நாலு பழங்கள்

அந்த ராஜகுமாரிக்குத்திருமணம் ஆகவேண்டும் அழகான அரச குமாரர்கள் பலர் அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள முயன்றார்கள். ''வெறும் அழகு மட்டும் இருந்தால் போதாது. புத்திசாலியாகவும் இருக்க வேண்டும். அவர்களுடைய புத்திசாலித் தனத்தைத் தெரிந்துகொள்ள நான் ஒரு சோதனை

வைப்பேன். அதில் யார் தேறுகிறார்களோ அவரையே கல்யாணம் பண்ணிக் கொள்வேன்'' என்று அவள் சொன்னாள்.

''எப்படி நீ சோதனை பண்ணுவாய்?'' என்று அவள் தந்தையாகிய அரசன் கேட்டான்.

''எனக்கு நாலு பழம் வேண்டும். அந்தப் பழங்கள் இப்படி இருக்க வேண்டுமென்று சொல்லுவேன். அவற்றை யார் கொண்டு வந்து தருகிறாரோ, அவரையே நான் மணப்பேன்'' என்று அவள் சொன்னாள்.

''என்ன பழம்?'' என்று அரசன் கேட்டான்.

''நாலு வகையான பழங்களை நான் சொல்லு கிறேன். அவற்றைக் கேட்டுக்கொண்டு ஒரு வாரத்தில் கொண்டுவந்து கொடுத்தால் அவரைக் கெட்டிக் காரர் என்று தெரிந்து கொண்டு திருமணம் செய்து கொள்வேன்'' என்று அவள் சொன்னாள்.

ஒரு நாள் ராஜசபை கூடியது. தனக்கு உரிய கணவனைத் தேர்ந்தெடுக்க அரசகுமாரி அந்தக் கூட்டத்தைக் கூட்டினாள். பல தேசத்து அரசகுமாரர் களும் வந்திருந்தார்கள். அரசனும் அரசியும் அவர் களுடைய குருவும் வேறு பல பெரிய மனிதர்களும் சபையில் கூடியிருந்தார்கள்.

அரசன் தன் புதல்வியைப் பார்த்து, ''உனக்கு எந்த வகையான பழங்கள் வேண்டுமென்பதைச் சொல். இங்கே வந்திருக்கும் அரச குமாரர்கள் இன் னும் ஒரு வாரத்தில் அந்தப் பழங்களைக் கொண்டு

வந்து கொடுக்க முயலுவார்கள். யார் முதலில் கொண்டு வந்து கொடுக்கிறுரோ அவரையே நீ திரு மணம் செய்து கொள்ளலாம்'' என்றுன்.

உடனே அந்த அரசகுமாரி தன் கருத்தை வெளி யிட்டாள். ''எனக்கு வேண்டிய பழங்கள் நாலு, ஒரு பழம் பழமானுலும் காயாகவே இருக்கும். பூப் பூத் தால் அது உதிர்ந்து காய் உண்டாகிக் கனி வருவது தான் இயல்பு, ஆனுல் காய் காய்த்தாலும் பழம் பழுத்தாலும் பூ இருக்கும் பழம் ஒன்று வேண்டும். அது இரண்டாவது. மூன்றுவது, பூ மலர்ந்தால் அழ காக இருக்கும். அது காயாகிப் பழுத்தால் யாரும் அதை விரும்ப மாட்டார்கள். அதைக் கண்டு அஞ்சு வார்கள். அது மூன்றுவது பழம். பழத்தைத் தின்று அதிலுள்ள கொட்டையை உமிழ்ந்து விடுவது வழக் கம். ஆனுல்ஒரு பழம் தின்றுலும் கொட்டைக்குப் பழுது வராது. அது நாலாவது பழம். இந்த நான்கு பழங்களையும் யார் கொண்டு வந்து தருகிறுர்களோ, அவர்களுக்கே நான் மாலையிடுவேன்'' என்று அரச குமாரி கூறி முடித்தாள்.

சபையில் உள்ள சிலர்,''ஏதோ பைத்தியக்காரத் தனமாக இந்தப் பெண் உளறுகிறது. இதைக் கேட் டுக் கொண்டு அரசனும் இந்தச் சபையைக் கூட்டி அந்த உளறலைக் கேட்கும்படி செய்தானே!'' என்று பேசிக் கொண்டார்கள்.

வந்திருந்த அரச குமாரர்களில் பலர், ''இந்தப் பெண் சொல்லும் பழங்களை நாம் தேடவும் வேண் டாம். இவளைக் கல்யாணம் செய்து கொள்ளவும் வேண்டாம்'' என்று சொல்லிப் போய்விட்டார்கள்.

அடுத்தவாரம் வந்தது. மறுபடியும் சபை கூடியது. இப்பொழுது பெரும் கூட்டம் கூடியது. அரசகுமாரி கேட்ட அதிசயமான பழங்களை யார் கொண்டு வரப் போகிறார்கள் என்று பார்ப்பதற்காக அவர்கள் கூடியிருந்தார்கள்.

அரசனும், அரசியும், குருநாதரும் சபையில் வந்து அமர்ந்தார்கள். அரசகுமாரியும் சபைக்கு வந்தாள். முன்னால் சபை கூடியபோது வந்திருந்த அரசகுமாரர்களில் பலர் வரவில்லை. சில பேர்களே வந்திருந்தார்கள். அவர்களும் வேடிக்கை பார்க்க வந்தார்களே ஒழிய, அரசகுமாரி சொன்ன நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை.

அப்பொழுது அரசன், "என் பெண் சொன்ன பழங்களை யாராவது கொண்டு வந்திருக்கிறார்களா?" என்று கேட்டான்.

சபையில் அமைதி நிலவியது. எந்த அரசகுமாரன் எந்தப் பழங்களைக் கொண்டு வந்திருக்கிறான் என்று தெரிந்து கொள்வதற்கு, வந்திருந்த எல்லோரும் ஆவலாக இருந்தார்கள்.

அப்பொழுது ஓர் அரச குமாரன் எழுந்தான். "நான் அரசகுமாரி சொன்ன நான்கு பழங்களையும் கொண்டுவந்திருக்கிறேன்" என்றான்.

எல்லோரும் அவனையே பார்த்தார்கள். அரசகுமாரி எழுந்தாள்; "பழமானாலும் காயாகவே இருக்கும் பழம் எது?" என்று கேட்டாள்.

உடனே அந்த அரசகுமாரன் பழுத்து முதிர்ந்து உதிர்ந்த தேங்காய் ஒன்றை எடுத்து வைத்தான்.

''இது நன்ருகப் பழுத்து உதிர்ந்துவிட்டது. என்ருலும் இதைத் தேங்காய் என்றுதானே சொல்லுகிருர்கள்? ஆகையால் பழுத்தாலும் காயாக இருப்பது இது'' என்று சொன்ஞன்.

அரச குமாரியின் முகம் மலர்ந்தது. மற்றவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள், அடுத்தபடி என்ன வரப்போகிறது என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். அரசகுமாரி, ''பழம் பழுத்தாலும் பூ இருக்கும் பழம் எது?'' என்று கேட்டாள்.

உடனே அந்த அரச குமாரன் ஒரு வாழைக் குலையை மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து வந்தான். அந்தக் குலையின் நுனியில் வாழைப் பூ, தொங்கியது. ''இதோ பாருங்கள்; பழமும் இருக்கிறது; பூவும் இருக்கிறது'' என்று காட்டிஞன். அரசகுமாரிக்கு மகிழ்ச்சி அதிகமாயிற்று.

அடுத்த சோதனையை அரசகுமாரி சொன்ஞள். ''பூ மலர்ந்தால் அழகாக இருக்கும். ஆஞல் காயாகிப் பழுத்தால் அதை யாரும் விரும்பமாட்டார்கள் என்றேன். அந்தப் பழம் என்ன?'' என்று கேட்டாள்.

அந்த அரசகுமாரன் ஒரு நெருஞ்சிச் செடியைக் கொத்தோடு எடுத்துக் காட்டிஞன். அதில் இலையும், பூவும், முள்ளும் இருந்தன. ''இதோ பாருங்கள்; இந்தப் பூ மஞ்சளாக அழகாக இருக்கிறது. ஆஞல் இந்தப்பூ காய்த்துப் பழமாஞல் முள்ளாகி விடுகிறது. இதை யார் விரும்புவார்கள்?'' என்று கேட்டான். சபையில் இருந்தவர்கள் குதூகலத்தால் ஆரவாரம் செய்தார்கள்,

இனி நான்காவது சோதனை ஒன்றுதான் பாக்கியிருந்தது. எல்லோருடைய ஆவலும் உச்சக் கட்டத்தை அடைந்தது.

"கொட்டையை உமிழ வேண்டிய அவசியம் இல்லாமல் தின்னும் பழம் எது?" என்று அரசகுமாரி கேட்டாள்.

"இதோ இது தான்" என்று அரசகுமாரன் ஒரு முந்திரிப் பழத்தை எடுத்து வைத்தான். அதில் பழத்துக்கு முன்னுலே கொட்டை ஒட்டிக்கொண்டு இருந்தது. "இந்தப் பழத்தைத் தனியே எடுத்துத் தின்று விடலாமே! விதைக்கு ஒன்றும் நேராதே!" என்று அரசகுமாரன் சொல்லிச் சிரித்தான்.

நான்கு சோதனைகளிலும் வென்ற அரச குமாரனிடம் அரசன் எழுந்து சென்று அவன் கையைப் பிடித்துக்கொண்டுவந்து தன் அருகே உள்ள ஆசனத்தில் அமர்த்தினன். அங்கேயே அரசகுமாரி அவன் கழுத்தில் ஒரு மாலையைப் போட்டாள்.

அதன் பிறகு ஒரு நல்ல நாளில் இருவருக்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தது.





# வீமனுக்கு இட்ட வேலை

தருமர், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற ஐந்து பேர்களும் பாண்டு என்ற அரசனின் புதல்வர்கள். அவர்களைப் பஞ்சபாண்டவர்கள் என்று சொல்வார்கள். தருமர் அறத்தையே எண்ணி வாழ்கிறவர். வீமன் மிக்க பலசாலி. அர்ச்சுனன்

வில்வித்தையில் சிறந்தவன். நகுலன் குதிரைகளை ஓட்டுவதில் வல்லவன். சகாதேவன் பெரிய ஞானி.

இந்தப் பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் செய்யும்படி நேர்ந்தது. அந்தக் காலத்தில் ஒரு நாள் துர்வாச முனிவர் அவர்களிடம் வந்தார். ''தர்மராஜாவே, நான் காட்டில் தவம் செய்கிறேன். எனக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ய யாராவது இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன். என்மனம் அறிந்து வேலை செய்யும் ஒருவன் வேண்டும்'' என்று தர்மரைப் பார்த்துச் சொன்னார்.

தர்மர், ''நாங்கள் ஐந்து பேர் இருக்கிறோம். எங்களுக்குள் யாரைத் தாங்கள் விரும்பினாலும் வருகிறோம்'' என்றார்.

துர்வாசர் வீமன் பலசாலியாக இருப்பதைப் பார்த்து அவனையே அழைத்துக்கொண்டு சென்றார். வீமனும் நல்ல காரியம் செய்ய வாய்ப்புக் கிடைத்தது என்று அவருடன் போனான்.

''முனிவர் பெருமானே, நான் எந்த விதமான பணிகளைச் செய்யவேண்டும்?'' என்று வீமன் கேட்டான்.

''நான் காலையில் எழுந்தவுடன் பல் துலக்க வேண்டும். அதற்குப் பல்குச்சி கொண்டு வந்து தர வேண்டும். பிறகு நீராடவேண்டும். அதற்கு மலையடிவாரத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டும். ஜபதபங்கள் முடிந்த பிறகு நான் உண்ணுவதற்குப் பழங்களைப் பறித்துக்கொண்டுவந்து தரவேண்டும்'' என்றார்.

''தங்களுக்குப் பணிவிடை செய்வது என் பாக்கியம்'' என்று சொல்லி வீமன் முனிவரை வணங்கினுன்.

முதல் நாள் காலையில் அவன் ஒரு கட்டுப் பல்குச்சியை ஒடித்துக் கொண்டு வந்து முனிவரிடம் கொடுத்தான். அதைக் கண்டு அவர் மிகவும் மகிழ்ந்து போனுர். பெரிய பெரிய குடங்கள் நிறையத் தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தான். முனிவர் என்றும் இல்லாத மகிழ்ச்சியோடு நீராடினுர். தவம் செய்ய அமர்ந்தார். அவர் கண் விழித்தபோது தம் முன் ஒரு பெரிய குவியலாகப் பழங்கள் இருப்பதைக்கண்டார். அவருக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. வயிருர அந்தப் பழங்களை உண்டார்.

நான்கு நாட்கள் இப்படியே வீமன் செய்துவந்தான். ஒரு நாள் இரவு, ''நான் கொஞ்சம் வெளியில் போய்வருகிறேன். ஒரு நாள் வரமாட்டேன். நாளைக்கு வேண்டியவற்றை யெல்லாம் இன்றே கொண்டுவந்து வைத்து விடுகிறேன்'' என்று சொல்லி விடைபெற்ருன். தன்னுடைய சகோதரர்களைப் பார்க்கப் போவான் என்று அவர் நினைத்தார்.

சொன்னபடியே இரண்டாவது நாள் வீமன் வந்தான். முனிவர் காலையில், ''பல்குச்சி வேண்டும்'' என்ருர்.

''இங்கே வாருங்கள்'' என்று வீமன் முனிவரை அழைத்துக் கொண்டு சென்ருன். என்ன ஆச்சரியம்! ஆசிரமத்துக்கு அருகில் ஒரு கால்வாய் ஓடிக்கொண்டிருந்தது. அதன் கரையில் ஒரு பக்கம் கருவேல மரங்கள், மற்ருெரு பக்கம் பலவகையான பழமரங்கள்.

"இது என்ன, புதிய படைப்பாக இருக்கிறதே! இவையெல்லாம் இங்கே எப்படி வந்தன?" என்று ஆச்சரியத்துடன் முனிவர் வீமனை வினவினார்.

"முனிபுங்கவரே, மலையருவியிலிருந்து ஒரு கால்வாயையே பறித்துத் தங்கள் ஆசிரமத்தின் வழியே போகும்படி செய்திருக்கிறேன். இதன் கரையில் இதோ பாருங்கள், கருவேல மரங்கள். தங்களுக்கு வேண்டிய படி குச்சியை ஒடித்துப் பல் துலக்கலாம். இந்தக் கால்வாயில் மனம்போல அமிழ்ந்து நீராடலாம். அதோடு பழ மரங்களை மண்ணோடு பேர்த்து வந்து நட்டிருக்கிறேன். ஜபதபம் முடிந்த பிறகு வேண்டிய பழங்களைப் பறித்து உண்ணலாம். நான் செய்ய வேண்டிய வேலை வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்; செய்கிறேன்" என்று சொல்லி கை கட்டி நின்றான் வீமன்.

"அடேயப்பா! நீ அசகாய சூரன் அப்பா! உனக்கு வேலை கொடுக்க நம்மால் முடியாது. எனக்கு வேண்டியவற்றையெல்லாம் ஒவ்வொரு நாளும் தேடி அலையாமல், ஆசிரமத்துக்கு அருகிலே கிடைக்கும்படி செய்துவிட்டாய். நீ தீர்க்காயுளுடன் வாழவேண்டும். இப்போதைக்கு உனக்குக் கொடுக்கும் வேலை என்னிடம் இல்லை. நீ சௌக்கியமாகப் போய்வா" என்று முனிவர் சொல்லி அவனை வழியனுப்பினார்.

"எப்போதும், எந்த வேலையும் நான் செய்யக் காத்திருக்கிறேன்" என்று சொல்லி அவன் புறப்பட்டு விட்டான்.



# பசித்த முனிவர்

ஒரு காட்டில் ஒரு முனிவர் ஒரு மரத்தடியில் தவம் பண்ணிக் கொண்டிருந்தார். கண்கள் மூடிய படியே அவர் தவத்தில் ஆழ்ந்திருந்தார். மூன்று மாதம் அப்படித் தவம் செய்வார். மூன்று மாதம் முடிந்த பிறகு அவர் கண்ணைத் திறப்பார். அப்போது அந்த மரத்திலிருந்து ஒரு பெரிய பழம் விழும். நீராடி விட்டு வந்து அதை உண்டு ஓரளவு பசியைப் போக்கிக் கொள்வார்.

அடுத்த நாளிலிருந்து மறுபடியும் கண்ணை மூடிக்

கொண்டு தவம் செய்ய உட்கார்ந்து விடுவார். மறுபடியும் மூன்று மாதம் கழித்துக் கண்ணைத் திறப்பார். அப்பொழுதும் அந்த மரத்திலிருந்து ஒரு பழம் விழும். அதை உண்பார். இப்படியே ஒவ்வொரு மூன்று மாதமும் நடந்து வந்தது.

இந்த முறை அவர் கண் விழிக்க வேண்டிய நாள் வந்தது. அடுத்த நாள் அவர் கண்விழித்துப் பழத்தை உண்ண வேண்டும். கண் விழிக்க வேண்டியதற்கு முதல் நாள் அங்கே ஒரு வேடன் வந்தான். மரத்தில் இருக்கும் பழத்தைப் பார்த்தான். அவன் நாக்கில் நீர் ஊறியது. அந்த மரத்தின் மேல் ஏறி அந்தப் பழத்தைப் பறித்துத் தின்றுவிட்டு வந்த வழியே போனன்.

மறுநாள் முனிவர் கண்ணைத் திறந்தார். அண்ணந்து மரத்தைப் பார்த்தார். அங்கே பழம் இல்லை. அவருக்கு அதிகப் பசியாக இருந்தது. யாரோ அதைப் பறித்துத் தின்றிருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டார். பசியோடு அவருக்குக் கோபமும் வந்தது. ''அந்தப் பழத்தைத் தின்றவனுக்குக் கடுமையான வயிற்றுவலி உண்டாகட்டும்'' என்று சாபம் இட்டார். நீராடி விட்டு வந்து வேறு பழமுள்ள மரத்தைத் தேடிச் சென்று அதிலிருந்த பழத்தைத் தின்று பசியாறினர். ஆனாலும் அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. வழக்கப்படி தாம் அமர்ந்திருந்த மரத்தின் அடிக்கு வந்து கண்ணை மூடித் தவம் செய்ய ஆரம்பித்தார்.

பழத்தைத் தின்ற வேடன் அந்தக் காட்டில்

வேறு ஓரிடத்தில் வேட்டையாடிக்கொண்டிருந்தான். முனிவர் இட்ட சாபத்தால் அவனுக்குப் பொறுக்க முடியாத வயிற்றுவலி வந்துவிட்டது. துடித்துப் போனான். ஏதேதோ பச்சிலையைத் தின்று பார்த்தான். வயிற்றுவலி அடங்கவே இல்லை. மரத்தடியில் முனிவர் இருந்ததை அவன் பார்த்திருக்கிறான். அவரிடம் போனால் அவர் தன் வயிற்றுவலியைத் தம்முடைய தவவலிமையினால் தீர்க்கக்கூடும் என்று எண்ணி வயிற்றைப் பிடித்துக்கொண்டே அங்கே போனான்.

முனிவர் தவத்தில் ஆழ்ந்திருந்தார். நல்ல வேளையாக மறுநாள் அவர் கண் விழித்தார். அப்போது அந்த வேடன் அவர் காலில் விழுந்து, ''முனிவர் பெருமானே, வயிற்றுவலியால் மிகவும் சங்கடப்படுகிறேன். தாங்கள் இதைத் தீர்த்து அருள் செய்ய வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டான்.

முனிவர், ''நீ இதற்கு முன் இங்கே வந்திருக்கிறாயா?'' என்று கேட்டார்.

''வந்திருக்கிறேன். இந்த மரத்தில் இருந்த பழத்தைத் தின்றேன். அதிலிருந்து வயிற்றுவலி பிடித்துக்கொண்டது'' என்று அழுது கொண்டே சொன்னான்,

''அந்தப் பழம் எனக்காக இருப்பது. மூன்று மாசத்துக்கு ஒருதரம் நான் தவம் கலைந்து அந்தப் பழத்தை உண்டு பசி ஆறுவேன். போன முறை அந்தப் பழத்தைக் காணவில்லை. அதனால் பழத்தை உண்டவனுக்கு வயிற்று வலி உண்டாகட்டும் என்று சாபம் இட்டேன். என் சாபம் பலித்து விட்டது'' என்று முனிவர் சொன்னார்.

''சுவாமி! என்னை மன்னிக்க வேண்டும். நான் தெரியாமல் செய்து விட்டேன். இந்த வயிற்று வலியை நீங்கள் தீர்த்து வைத்தால் நான் உங்களுக்குக் காவலாக இருப்பேன். வேறு யாரும் இந்தப் பழத்தைத் தொடாதபடி பார்த்துக் கொள்வேன். ஐயோ! வயிற்றுவலி தாங்க முடியவில்லையே! சுவாமி! எப்படியாவது இதைப் போக்கி விடுங்கள்'' என்று வேடன் மறுபடியும் காலில் விழுந்து கெஞ்சினான்.

''உன் வயிற்றுவலியை நான் போக்கிவிடுகிறேன். ஆனால் அதற்கு நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். நான் சொல்கிற நிபந்தனையின்படி நீ நடந்து வர வேண்டும்'' என்று முனிவர் கூறிய போது, ''சுவாமி! நீங்கள் எதைச் சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். எப்படியாவது என் வயிற்றுவலியைத் தீர்த்தருள வேண்டும். இனிமேல் நான் உங்களுக்கு அடிமையாக இருப்பேன்'' என்று வேடன் கதறினான்.

''நான் சொல்கிற நிபந்தனை இதுதான். நீ இனி மேல் எந்த மிருகத்தையும் கொல்லக்கூடாது. பழம், காய், கிழங்கு, சோறு இவைகளையே சாப்பிட வேண்டும். எந்தப் பிராணியையும் அடித்துத் தின்னக் கூடாது. இப்படிச் சத்தியம் செய்து தருவாயா?'' இப்படி முனிவர் கேட்டார்.

''இதோ, இப்போதே சத்தியம் செய்து தருகிறேன். என் தலைமேல் ஆணையாக, நான் எந்தப் பிராணியையும் கொல்ல மாட்டேன்; மாமிசத்தைத் தின்னவும் மாட்டேன்'' என்று வேடன் சத்தியம் செய்து கொடுத்தான்.

அதைக் கேட்ட முனிவர் அவனைப் பக்கத்தில் வரச் செய்து சுவாமியின் திருநாமத்தைச் சொல்லித் தம்மிடம் இருந்த விபூதியை எடுத்து அவன் வயிற்றின் மேல் தடவினர். என்ன ஆச்சரியம்! அவன் வயிற்று வலி நின்று விட்டது.

வேடன் மறுபடியும் விழுந்து முனிவரை வணங்கினன்.

முனிவர் அவனுக்கு ஆசி கூறி அனுப்பினர்.





# என்ன தண்டனை கொடுப்பது?

அந்த அரசனுடைய மனைவிக்கு ஒரு தம்பி இருந்தான். அவளுக்கு அவனை எப்படியாவது மந்திரி ஆக்கிவிடவேண்டும் என்று ஆசை. அரசனுக்கு மிகவும் வயசான மந்திரி ஒருவர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர்; புத்திசாலி; உலக அநுபவம் மிக்கவர்.

''எவ்வளவு நாளைக்கு இந்தக் கிழட்டு மந்திரியை வைத்துக் கொண்டிருப்பீர்கள்? அவருக்கு ஓய்வு கொடுத்துவிட்டு என் தம்பியை மந்திரியாக்குங்கள்'' என்று அரசி நச்சரித்து வந்தாள்.

ஒரு நாள் அரசன் அவளிடம், ''உன் தம்பியை மந்திரி ஆக்குவதில் எனக்கு ஒரு தடையும் இல்லை. ஆனாலும்: அவனுடைய திறமையை ஒருவாறு பரிசோதனை செய்த பிறகு மந்திரி ஆக்கலாம். இல்லாவிட்டால், 'தன் மைத்துனனை மந்திரியாக்கி விட்டான்' என்று என்னை உலகம் பழிக்கும்'' என்றான்.

''அப்படியே செய்யுங்கள். என் தம்பி அறிவில் மட்டமானவனா? அவன் நன்றாகப் படித்திருக்கிறான். அவனைச் சோதனை செய்து பாருங்கள். அப்போது தான் உங்களுக்கு அவன் அருமை தெரியும்'' என்று அரசி சொன்னாள்.

சோதனை செய்ய ஒப்புக்கொண்டாளே என்று அரசன் மகிழ்ந்தான். எவ்வாறு சோதனை செய்வது என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். தன்னுடைய யோசனையை அரசியிடமும் சொன்னான். அவளும் அப்படியே செய்யலாம் என்று ஒப்புக் கொண்டாள்.

ஒருநாள் அரசன் தன் மைத்துனனை வரச்சொன்னான். அரச சபையில் சில முதியவர்களையும், அந்த முதிய மந்திரியையும் வந்து இருக்கச் சொன்னான். அரசியும் உடன் இருந்தாள். அவளுடைய தம்பி அன்று மிகநன்றாக அலங்கரித்துக்கொண்டு வந்தான். வாட்டசாட்டமான அவனைக் கண்டு அரசியின் உள்ளம் பூரித்தது. அவன் நிச்சயமாக மந்திரியாகப் போகிறான் என்ற நம்பிக்கை அவளுக்கு உண்டாயிற்று.

அரசன், ''சோதனையை ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்டான். அரசி, ''ஆகா, ஆரம்பிக்கலாம்'' என்ருள்.

அரசன் தன் மைத்துனனைப் பார்த்துப் பேசினான். ''நேற்று இரவு நான் படுத்துக் கொண்டிருந்த போது ஒரு பயல் வந்தான். என் மார்பில் உதைத்தான். என் மேல் எச்சில் உமிழ்ந்தான். என் காதைப் பிடித்துத் திருகினான். அவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?'' என்று கேட்டான்.

அரசியின் தம்பி, ''இராத்திரி நடந்ததை இவ்வளவு நேரம் கழித்துச் சொல்கிறீர்களே! அப்பொழுதே உதைத்த அவன் காலை வெட்டியிருக்க வேண்டாமா? துப்பிய அவன் வாயைக் கிழித்துப் போட்டிருக்கலாமே! அவனுடைய கையைத் துண்டித்து விட்டல்லவா மறு காரியம் பார்த்திருக்க வேண்டும்?'' என்று படபடப்பாகப் பேசினான்.

அவன் பேச்சைக் கேட்ட போது அரசன் சிரித்துக் கொண்டான். அரசிக்கோ கோபத்தால் கண்கள் சிவந்தன. அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அரசன் அவளைக் கையமர்த்திச் சும்மா இருக்கச் சொன்னான்.

பிறகு தன் மந்திரியாகிய முதியவரைப் பார்த்து அரசன், ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்ருன்.

''உங்களை உதைத்த காலுக்குத் தண்டையும் கொலுசும் பண்ணிப் போடுங்கள். காதைத் திருகிய கைக்குத் தங்கக்காப்புப் போடுங்கள். உமிழ்ந்த

வாயில் கல்கண்டு கொடுங்கள்'' என்று அந்த மந்திரி சொன்னார்.

அரசியின் முகம் மலர்ந்தது.

''ஏன் அப்படிச் சொல்கிறீகள்? இவள் தம்பி அவனைத் தண்டிக்கும்படி அல்லவா சொல்கிறான்?'' என்று அரசன் கேட்டான்.

''அரசே, உங்களை இரவில் அவ்வளவு தைரியமாக வந்து உதைப்பதற்கும் உமிழ்வதற்கும் வேறு யாருக்கு முடியும்? அரண்மனையில் கட்டுக்காவல் இருக்கும் போது கொடியவன் யாராவது வர முடியுமா? அப்படி ஒருவன் வந்தால் நீங்கள் உடனே எல்லாரையும் எழுப்பிக் கட்டி உதைக்கச் சொல்ல மாட்டீர்களா?'' என்று மந்திரி கேட்டார்.

''அப்படிச் செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவனுக்குத் தண்டை கொலுசு போட வேண்டும் என்று சொல்கிறீர்களே! ஏன்?'' என்று அரசன் கேட்டான்.

''உங்கள் குழந்தைக்கு அப்படித்தானே செய்ய வேண்டும்? அவன்தானே அப்படியெல்லாம் செய்தான்? அப்படிச் செய்ததனால் உங்களுக்கும் அரசிக்கும் எவ்வளவு சந்தோஷம் உண்டாகியிருக்கும்!'' என்றார் மந்திரி.

''சரியாகச் சொன்னீர்கள்!'' என்று அரசியே மகிழ்ச்சியுடன் சொன்னாள். அதோடு, ''இந்த முரடனை என் தம்பி என்று சொல்லவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. இவனுக்கு மந்திரிப் பதவி ஒரு கேடா?'' என்று உணர்ச்சியுடன் இரைந்தாள்.

அந்த மைத்துனன் தலையைக் குனிந்து கொண்டான்.

"இவனுக்கு உலக அநுபவம் போதாது, இவனை ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள்?" என்று மந்திரி சமாதானம் செய்து வைத்தார்.

அதற்குப் பின் அரசி தன் தம்பியைப் பற்றிய பேச்சையே எடுக்கிறதில்லை.





# குழந்தையும் திருடர்களும்

குழந்தைக்கு அம்மா பாடம் சொல்லிக் கொடுத்தாள். சின்னச் சின்ன வாக்கியங்களாக அதற்குச் சொல்லிக்கொடுத்து அதை ஒப்புவிக்கச் சொன்னாள். நாம் அடிக்கடி காணும் பொருள்களையெல்லாம் காட்டி, அவற்றின் பெயர்களை வாக்கியங்களில் வைத்து, அந்த வாக்கியங்களைச் சொல்லிக் கொடுத்தாள். குழந்தை அந்த வாக்கியங்களை அப்படியே ஒப்புவித்தது. அதன் குரல் கணீர் என்று இருந்தது.

‘‘அதோ பார்: தென்ன மரம் எவ்வளவு உயரமாக இருக்கிறது! தென்ன மரம் நிற்கிறது என்று சொல் பார்க்கலாம்’’ என்று அம்மா சொல்லிக் கொடுத்தாள்.

குழந்தை, ‘‘தென்ன மரம் நிற்கிறது, தென்ன மரம் நிற்கிறது’’ என்று உருப் போட்டது.

‘‘பெருச்சாளி பார்த்திருக்கிருயோ? அது சுவரையெல்லாம் குழி பறிக்கும். குடு குடு என்று ஓடும்’’ என்ருள் அம்மா.

‘‘பெருச்சாளி என்ருல் என்ன அம்மா?’’ என்று கேட்டது குழந்தை.

‘‘எலி பார்த்திருக்கிருய் அல்லவா? அது மாதிரி தான் இருக்கும். ஆனுல் மிகவும் பெரிசாக இருக்கும்’’ என்ருள் தாய்.

‘‘இவ்வளவு பெரிசாக இருக்குமா?’’ என்று குழந்தை தன் கையை விரித்துக் காட்டியது.

‘‘ஆமாம், அவ்வளவு பெரிசாகத்தான் இருக்கும்’’ என்ருள் அம்மா.

‘‘ஆந்தை தெரியுமா?’’

‘‘தெரியாது.’’

‘‘அது ஒரு பட்சி. கண் உருண்டையாக இருக்கும். கொட்டக் கொட்ட விழிக்கும்.’’

‘‘ஆந்தை முழியன் என்று பக்கத்து வீட்டுப் பையனை யாரோ சொன்ஞர்கள்; கேட்டிருக்கிறேன்.’’

“ஆமாம்; ஆந்தைக்கு விழி பெரியது. அது விழித்தால் பயமாக இருக்கும்.”

“ஆந்தை விழிக்கிறது” என்று சொல்லிப் பார்த்துக் கொண்டது, குழந்தை.

“நரி பார்த்திருக்கிருயோ?” அம்மாவின் கேள்வி இது.

“இல்லையே!”

“நாய் மாதிரிதான் இருக்கும். ஆனால் வால் புஸு புஸு என்று இருக்கும். நாயை விட வேகமாக ஓடும்.”

“இங்கே நரி இருக்கிறதோ?”

“இங்கே யெல்லாம் இருக்காது. காட்டில்தான் இருக்கும்.”

“ஓ! நரி ஓடும்; வேகமாக ஓடும்; இல்லையா?”

“ஆமாம்.”

“நரி ஓடுகிறது” என்று குழந்தை சொல்லிப் பார்த்தது.

அதோடு அம்மா அன்று சொல்லிக் கொடுப்பதை நிறுத்திக் கொண்டாள்.

குழந்தை அம்மா சொல்லிக் கொடுத்த நான்கு விஷயங்களைத் திருப்பித் திருப்பி யோசித்து அந்த நாலு பிராணிகளையும் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தது. “தென்னமரம் நிற்கிறது. பெருச்சாளி சுவரைப் பறிக்கிறது. ஆந்தை விழிக்கிறது. நரி ஓடுகிறது” என்று மனப் பாடம் செய்து கொண்டது.

இரவு வந்து விட்டது. ஆறு மணிக்கே சாப்பிட்டு விட்டுக் குழந்தை படுத்து உறங்கி விட்டது. ஆனல் பாதி ராத்திரியில் அதற்கு விழிப்புக் கொடுத்து விட்டது. தான் அறிந்த விஷயங்களைச் சொல்லிப் பார்க்கவேண்டும் என்று அதற்குத் தோன்றியது. பாடம் படிப்பது போல அந்த வாக்கியங்களைச் சொல்ல ஆரம்பித்தது.

அப்போது அந்த வீட்டில் திருடுவதற்கு இரண்டு திருடர்கள் வந்தார்கள். சுவரில் கன்னம் போட்டு உள்ளே புகுந்து திருடுவதாக எண்ணி வந்திருந்தார்கள்.

அப்போது குழந்தை சற்றுப் பலமாக, ''தென்ன மரம் நிற்கிறது'' என்றது. அந்த வார்த்தைகள் திருடர்களின் காதில் விழுந்தது.

''யாரோ விழித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் போய் விடலாம்'' என்று ஒரு திருடன் சொன்னன்.

''போடா பைத்தியக்காரா! இவ்வளவு தூரம் வந்து விட்டுச் சும்மா போவதா? ஏதோ குழந்தை தூக்கத்தில் உளறுகிறது. அதைக் கேட்டுப் பயப்படலாமா?'' என்ருன் மற்ருெருவன்.

உடனே கன்னக்கோலை எடுத்துச் சுவரைத் துளை போட்டுப் பறிக்க ஆரம்பித்தார்கள்.

அப்போது குழந்தை, ''பெருச்சாளி பறிக்கிறது'' என்றது. அதைக் கேட்டுத் தைரியம் சொன்ன திருடனுக்கே சந்தேகம் வந்து விட்டது. உற்றுக் கவனித்தான்.

இப்போது குழந்தை, ‘‘ஆந்தை விழிக்கிறது’’ என்றது. அந்தத் திருடனுக்கு உண்மையில் பயம் தோன்றியது. ‘நாம் செய்கிறதை அந்தக் குழந்தை கவனித்து விட்டுத்தான் சொல்கிறது’ என்று நினைத் தான்.

மறுபடியும் குழந்தை, ‘‘ஆந்தை கொட்டக் கொட்ட விழிக்கிறது’’ என்று சொல்லியது.

‘‘ஓ! நாம் ஏமாந்து விட்டோம். யாரோ குழந்தைக் குரலில் பேசுகிறார்கள். நம்மைக் கண்டு கொண்டிருக்க வேண்டும்’’ என்று எண்ணித் திருடர் கள் ஓடத் தொடங்கினார்கள்.

அப்போது அந்தக் குழந்தை, ‘‘நரி ஓடுகிறது’’ என்று சொன்னது அவர்கள் காதில் விழுந்தது.

‘‘சந்தேகமே இல்லை. நாம் இங்கே இருக்கக் கூடாது. ஓடிப் போகத்தான் வேண்டும்’’ என்று எண்ணி அவர்கள் ஓடி விட்டார்கள். ‘‘நரி வேகமாக ஓடுகிறது’’ என்று மறுபடியும் அந்தக் குழந்தை சொன்னது, திருடர்களுக்குப் பொருத்தமாக இருந் தது.

அந்தத் திருடர்களால் அந்த வீட்டில் திருட முடியாமல் போயிற்று.

(ஒரு நாடோடிக் கதையைத் தழுவியது.)



# நாக மாணிக்கம்

கண்ணனுக்கு மலை ஏறுவதென்றால் மிகவும் பிடிக்கும். அவன் ஊருக்கு அருகில் ஒரு மலை இருந்தது. அதில் ஏறிப் பார்க்கவேண்டும் என்று அவனுக்கு ஆசைதான். ஆனால் மலையின் சாரலில் உள்ள காடுகளில் சிங்கம், புலி முதலிய மிருகங்கள் இருந்தன. அதனால் அவன் அதன்மேல் ஏறப் பயப்பட்டான்.

அந்த மலையின் மேல் ஓர் ஆலமரம் இருக்கிற தென்றும், அதில் பல நாகப் பாம்புகள் இருக்கின் றன என்றும், அதன் உச்சியில் ஒரு நாக மாணிக்கம் இருக்கிறதென்றும் மக்கள் சொல்லிக் கொண் டார்கள்.

அந்த ஊர் அரசனுக்கும் இந்தச் செய்தி தெரிய வந்தது. அவனுக்கு அழகான பெண் ஒருத்தி இருந் தாள். அவளுக்குத் திருமணம் ஆக வேண்டும். "மலை யின் மேல் உள்ள நாக மாணிக்கத்தை யார் கொண்டு வந்து தருகிறார்களோ, அவனுக்கு என் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுப்பேன்" என்று அரசன் பறை அறையச் செய்து தெரிவித் தான். அந்த அழகான அரசகுமாரியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று அரச குமாரர் கள் பலர் ஆசைப்பட்டார்கள். அரசன் போட்ட நிபந்தனையை நிறைவேற்றினால்தானே அவள் கிடைப்பாள்? சில பேர் அந்த மலையின் மேல் ஏறிக் காட்டை அடைந்ததும் அங்கே இருந்த சிங்கம், புலியைக் கண்டு பயந்து திரும்பி விட்டார்கள்.

தன் பெண்ணுக்குச் சிறந்த வீரனாகிய ஒருவன் கணவனாகக் கிடைக்கவில்லையே என்று அரசன் வருந் தினான். கண்ணன் அந்த மலையில் ஏற முடியவில்லையே என்று எண்ணி வருந்தினான்.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு சாமியார் வந்தார். எந்தச் சாமியாரைக் கண்டாலும் அவரை வணங்கி ஆசி பெறுவது கண்ணன் வழக்கம். ஆகவே அந்தச் சாமியாரைக் கண்டதும் அவன் வணங்

கிறுன். பழங்களை வாங்கிக் கொண்டு வந்து தந்தான். அவனுடைய நல்ல குணத்தைக் கண்ட சாமியார் மனம் மகிழ்ந்து, "தம்பி, உனக்கு என்ன வேண்டும்? கேள், தருகிறேன்" என்முர்.

"சாமி, இந்த மலையின்மேல் ஏறி உச்சியில் ஆலமரத்தில் உள்ள நாகமாணிக்கத்தை எடுத்து வர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனுல் மலையிலுள்ள காடுகளில் புலியும், சிங்கமும், வேறு மிருகங்களும் இருக்கின்றன. ஆலமரத்தில் கொடிய விஷமுள்ள பாம்புகள் இருக்கின்றனவாம். அவைகளை யெல்லாம் தாண்டிக்கொண்டு போய் அந்த நாக மாணிக்கத்தை எப்படி எடுப்பது? தாங்கள் ஏதாவது வழி சொல்லித்தந்தால் அப்படியே செய்வேன்" என்று கண்ணன் சாமியாரிடம் வேண்டிக் கொண் டான்.

சாமியார் சிறிது திருநீறு அளித்து அதைப் பூசிக் கொள்ளச் சொன்னுர். பிறகு ஒரு தடியையும் நீள மான கயிறு ஒன்றையும் அவனிடம் கொடுத்தார். "இந்தத் தடியினுல் காட்டு மிருகங்களை அடித்துக் கொன்று விடலாம். இந்தக் கயிற்றில் சுருக்குப் போட்டுச் சிறிய மிருகங்களையும் பாம்புகளையும் கொன்று விடலாம்" என்று சொன்னுர். கண்ணன் அந்த இரண்டையும் வாங்கிக் கொண்டான்,

சாமியார் சொன்ன தைரியத்தின்மேல் அவன் அந்த இரண்டையும் எடுத்துக் கொண்டு மலையின் மேல் ஏறலானுன். காட்டுக்கு வந்தவுடன் ஒரு சிங்கம் கனைத்துக் கொண்டு வந்தது. கண்ணன் பயப்

படாமல் சாமியாரை நினைத்துக்கொண்டு தன் கையில் இருந்த தடியினால் அதை அடித்தான். அது அங்கேயே உயிரற்று விழுந்து விட்டது. பிறகு "உர்" என்று ஒரு புலி சீறிக்கொண்டு வந்தது. சிங்கத்தைக் கொன்றதனால் தைரியம் அடைந்த கண்ணன் அதையும் தடியால் அடித்தான். அதுவும் இறந்தது. அப்பால் ஓர் ஓநாய் வந்தது. கண்ணன் கயிற்றில் சுருக்குப் போட்டு அதன் கழுத்தில் வீசி இழுத்தான். சுருக்கு இறுகி ஓநாய் வாயைப் பிளந்துகொண்டு பிணமாக விழுந்தது. அடுத்தபடி ஒரு கரடி வந்தது. அதைத் தடியால் அடித்து விழப்பண்ணினான். யானை வந்தது. அதையும் அடித்தான். இவ்வாறு எதிர்ப்பட்ட மிருகங்களையெல்லாம் அடித்து விழச்செய்து காட்டைக் கடந்து மலையின்மேல் ஏறினான்.

மலை உச்சியை அடைந்து அங்கே இருந்த ஆல மரத்தைப் பார்த்தான். அதில் பெரிய பெரிய நாகப் பாம்புகள் தொங்கிக்கொண்டிருந்தன. கண்ணனைக் கண்டவுடன் அவை புஸ், புஸ் என்று சீறின. கண்ணன் பயப்படவில்லை. சிலவற்றைத் தடியால் அடித்துக் கொன்றான். சிலவற்றைக் கயிற்றால் சுருக்குப் போட்டுப் பிணமாக்கினான். பாம்புகளைக் கொல்வதில் நெடு நேரம் கழிந்தது. அதனால் அவனுக்குக் களைப்பாக இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தான். அருகில் மா மரம், ஆப்பிள் மரம் எல்லாம் இருந்தன. அங்கே ஒரு குளம் கூட இருந்தது. அந்தக் குளத்தில் இறங்கி நீராடினான். உடம்பிலே தெம்பு உண்டாயிற்று. மரத்தின் மேல் ஏறிப் பழங்களைப் பறித்துத்

தின்றான். இப்போது அவனுக்குப் பசி தீர்ந்தது. உற்சாகம் உண்டாயிற்று.

பிறகு மெல்ல அந்த ஆலமரத்தில் ஏறினான். பொந்தில் ஏதாவது பாம்பு இருக்குமோ என்று ஜாக்கிரதையாகக் கவனித்தபடியே ஏறினான். சின்னப் பாம்புகள் ஒன்று இரண்டு இருந்தன. பெரிய பெரிய மிருகங்களையும், பாம்புகளையும் அடித்துக் கொன்றவனுக்கு அவை எம்மாத்திரம்? அவற்றையும் அடித்து எறிந்துவிட்டு ஆலமரத்தின் உச்சிக்கே ஏறினான்.

ஆ! அங்கே அந்த நாகமாணிக்கம் பளபளவென்று ஒளி வீசிக்கொண்டிருந்தது. உச்சிக் கிளையில் இலைக் கொத்துக்கு நடுவில் சிறிய அக்கினிக் குஞ்சுபோல அது மின்னிக் கொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் அவனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதை எடுத்துத் துடைத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டான்.

மெல்ல மரத்தை விட்டு இறங்கி, தான் வந்த காட்டையும் தாண்டி, அடிவாரத்துக்கு வந்தான். தன் வீட்டுக்குச் சென்று நாகமாணிக்கத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டினான். மிகவும் களைப்பாக இருந்ததனால் அன்று படுத்து நன்றாகத் தூங்கினான்.

விடிந்ததும் எழுந்து நீராடிவிட்டு நாகமாணிக்கத்தை எடுத்துக் கொண்டு அரசனிடம் போய் அதைக் காட்டினான். அழகாகவும், பலசாலியாகவும் இருந்த கண்ணனைக் கண்டான் அரசன். அவன் செய்த வீரச் செயலை மெச்சி அந்த நாக மாணிக்

கத்தை வாங்கிக்கொண்டான். அதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான்.

கண்ணன் நாக மாணிக்கத்தைக் கொண்டு வந்து விட்டான் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியது. அவனைப் பார்க்க எல்லாரும் வந்து கூடினார்கள்.

அரசன் தன் மகளைக் கண்ணனுக்கு மிகவும் விமரிசையாகக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தான். அந்த நாகமாணிக்கத்தைத் தன் பெண்ணுக்கே சீதனமாகக் கொடுத்தான்.

கண்ணனுக்கு மாணிக்கம் போன்ற அரசகுமாரி கிடைத்தாள்; அவன் வீரச்செயல் செய்து எடுத்து வந்த நாகமாணிக்கமும் கிடைத்தது.







# அதிசயப் பெண்

வித்தியாதரர் என்ற அறிவாளிக்கு வித்தியா வதி என்ற பெண் ஒருத்தி இருந்தாள். அவர் அந்தப் பெண்ணை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். வித்தியாவதி மிகவும் அழகுடையவள். அவளைப் போன்ற அழகுடையவள் உலகத்திலேயே இரண்டு மூன்று பேர்களே இருப்பார்கள்.

அந்த அழகியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று பணக்காரப் பிள்ளைகள் ஆசைப் பட்டார்கள். அரச குமாரர்கள் விரும்பினார்கள்.

வித்தியாதரரோ சிறந்த அறிவாளி ஒருவனுக்கு அவளை மணம் செய்துவைக்க வேண்டுமென்று விரும்பினார். ஆகையால் யாராவது அவரிடம் வந்து பெண் கேட்டால், ''இவளுடைய அழகைக் கண்டு ஏமாந்து போகாதீர்கள். இவளுடைய சுபாவத்தை நான் எடுத்துச் சொன்னால் நீங்கள் இவளை விரும்ப மாட்டீர்கள்'' என்று சொல்வார். தகப்பனாரே இப்படி வெளிப்படையாகச் சொன்னால் அதைக் கேட்டவர்கள் துணிந்து எப்படிக் கல்யாணம் செய்துகொள்ள முன் வருவார்கள்?

ஒரு நாள் ஒருவன் வந்தான். பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வந்ததாகச் சொன்னான். வித்தியாதரர் வழக்கம்போல், ''அவள் சுபாவம் உனக்குப் பிடிக்காதே!'' என்றார்.

''அவள் சுபாவம் என்ன? சொல்லுங்கள்'' என்றான்.

உடனே அவர், ''அதை ஏன் அப்பா கேட்கிறாய்? ஒன்றா? இரண்டா? அவளைச் சமையல் செய்யச் சொன்னால் கல்லைப் போட்டுச் சமைப்பாள். நீ அதைப் பொறுத்துக் கொள்வாயா?'' என்று கேட்டார்.

வந்தவன் பேசாமல் போய்விட்டான்.

சில நாள் கழித்து மற்றொருவன் வந்தான். அவனிடம், "கல்லைப் போட்டுச் சமைப்பாள். சாப்பிட்டால் ஆதார வஸ்துவை வெளியில் எறிவாள்', என்றார். அவனும், 'இவள் அதிசயப் பெண்ணாக இருப்பாள் போல் இருக்கிறது; நமக்கு உபயோகப்பட மாட்டாள்' என்று எண்ணிப் போய்விட்டான்.

மறுபடியும் ஒருவன் வந்தான். அவனிடம் முன்னே சொன்ன இரண்டோடு மற்றொன்றையும் சேர்த்துச் சொன்னார்.

"கல்லைப் போட்டுச் சமைப்பாள். சாப்பிட்டால் ஆதார வஸ்துவை வெளியிலே எறிவாள். வேகாத இலையையும் வெட்டின காயையும் வெந்த கல்லையும் கலந்து கொண்டு வந்து வைப்பாள்."

வந்தவன் அருண்டு போனான். 'சே, சே! இவள் பெண்ணா, பேயா?' என்று எண்ணிக்கொண்டு போய் விட்டான்.

திரும்பவும் ஒரு புதிய இளைஞன் வந்தான். வித்தியாதரர் வித்தியாவதியின் சுபாவங்களை வரிசையாக அடுக்கினார். இந்தத் தடவை மற்றொன்றையும் கூட்டிச் சொன்னார். "வேகாத கட்டைக் குழம்பை ஊற்றுவாள்" என்று சேர்த்துச் சொன்னார். பாவம்! அந்த இளைஞன் ஒன்றும் பதில் பேசாமல் போய் விட்டான்.

பின்னும் ஒருவன் வந்தபோது வித்தியாதரர். "அவள் இரண்டு மாட்டின் மேல்தான் படுத்துத் தூங்குவாள்" என்பதையும் சேர்த்துச் சொன்னார்' அவனும் வந்த வழியே போனான்.

பிறகு யாராவது வந்தால், கடகடவென்று இத்தனையையும் ஒரு முறை சொல்வார்.

''கல்லைப் போட்டுச் சமைப்பாள்; சாப்பிட்டால் ஆதார வஸ்துவை எறிந்து விடுவாள்; வேகாத இலையையும், வெட்டின காயையும், வெந்த கல்லையும் கலந்து வைப்பாள்; வேகாத கட்டைக் குழம்பை ஊற்றுவாள்; இரண்டு மாட்டின் மேல் படுத்துத் தூங்குவாள்'' என்பதை வந்தவர்களிடம் சொல்லுவார். அவர்கள் வேறு ஏதாவது கேட்டால், ''அவள் சுபாவம் இது! உனக்குப் பிடிக்குமானல் சொல்'' என்று சொல்வார். வந்தவர்கள் போய் விடுவார்கள்.

இப்படிப் பல மாதங்கள் கழிந்தன. கடைசியில் அறிவும் அழகும் உடைய ஒரு கட்டிளங் காளை வந்தான். அவன் சுகுமாரன் என்ற பெயருடையவன். வித்தியாதரரிடத்தில் பேசிக்கொண்டிருந்தான். வித்தியாவதியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தை மெல்ல வெளியிட்டான். அவர் வழக்கப்படியே அவள்செய்யும் காரியங்களை அடுக்கினர். 'இவ்வளவு அறிவாளியான இவர் மகள் ஒன்றும் தெரியாதவளாகவோ, பொல்லாதவளாகவோ இருக்கமாட்டாள். இதில் ஏதோ சூட்சுமம் இருக்கிறது' என்று எண்ணிய இளைஞன், ''அவள் என்ன செய்தாலும் சரி; அதனுல் நான் வருத்தப்படமாட்டேன். அவளைக் கல்யாணம் செய்துகொள்ளச் சித்தமாக இருக்கிறேன்'' என்றான்.

''யோசித்துச் சொல், அப்பா. பிறகு வருத்தப்

படும்படி வைத்துக் கொள்ளக் கூடாது.'' என்று வித்தியாதரர் சொன்னார்.

''வருத்தம் உண்டாக இடம் இல்லை. என்னை உங்களுக்குப் பிடித்திருந்தால் உங்கள் பெண்ணைத் தாருங்கள்; இல்லாவிட்டால் வேண்டாம்'' என்றான் அவன்.

வித்தியாதரருக்குச் சுகுமாரனுடைய அழகும் குணமும் பிடித்திருந்தன. வித்தியாவதியை அவனுக்கே மணம் செய்து கொடுத்துவிட்டார்.

வித்தியாவதியும் சுகுமாரனும் மனைவியும் கணவனுமாகக் குடித்தனம் நடத்த ஆரம்பித்தார்கள். அவள் மிகவும் நன்றாகச் சமைத்தாள். சுகுமாரன் மகா புத்திசாலி. ஆகையால் நாளடைவில், தன் மாமனார் சொன்ன விஷயங்களின் உண்மையைத் தெரிந்துகொண்டான்.

ஒரு நாள், ''நான் கல்லைப் போட்டுச் சமைப்பேன் என்று என் தகப்பனார் சொன்னாரே; நீங்கள் என்னை எப்படி ஏற்றுக் கொண்டீர்கள்?'' என்று வித்தியாவதி தன் கணவனைக் கேட்டாள்.

சுகுமாரன், ''உப்புக் கல்லைப் போட்டுச் சமைப்பாய் என்று தெரிந்து கொண்டேன். உப்பில்லாமல் எப்படிச் சமைக்க முடியும்?'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

''சாப்பிட்டால் ஆதார வஸ்துவை எறிந்து விடுவது உங்களுக்குச் சம்மதந்தானா?'' என்றாள் வித்தியாவதி.

''காய்கறி சோறு எல்லாவற்றையும் படைக்கும் இலைதான் ஆதார வஸ்து. சாப்பிட்டால் அதை எறியாமல் என்ன செய்வது?'' என்று சுகுமாரன் சொன்னான்.

''வேகாத இலையையும் வெட்டின காயையும் வெந்த கல்லையும் நான் கலந்து வைப்பதை நீங்கள் பார்த்ததுண்டோ?'' என்று அவள் கேட்டாள்.

''தினமுந்தான் செய்கிறாய். வேகாத இலை வெற்றிலை; வெட்டின காய் அடைக்காயாகிய பாக்கு; வெந்த கல் சுண்ணாம்பு; இந்த மூன்றையும் நீ கலந்து தராவிட்டால்தான் எனக்குப் பிடிக்காது'' என்று சுகுமாரன் சந்தோஷத்துடன் சொன்னான்.

''அந்தக் குழம்பைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?'' என்று வித்தியாவதி அடுத்த கேள்வி கேட்டாள்.

''அது சந்தனக் குழம்பு என்று எனக்குத் தெரியாதா? வேகாத கட்டை சந்தனக்கட்டை; அதன் குழம்பு சந்தனக் குழம்பு. அதனை என்மேல் நீ ஊற்றினால் எனக்கு மகிழ்ச்சிதான் உண்டாகும்.''

''இரண்டு மாட்டின்மேல் தூங்குவதைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கடைசிக் கேள்வியைக்கேட்டாள் வித்தியாவதி.

''நான்கூடத்தான் கால்மாடு, தலைமாடு ஆகிய இரண்டு மாட்டின்மேல் தூங்குகிறேன். நீ தூங்குவது அதிசயம் அல்லவே!'' என்று சுகுமாரன்

சொன்னபோது, வித்தியாவதிக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

''எங்கள் தகப்பனார் எல்லாரையும் ஏமாற்றிவிட்டார். உங்களை மாத்திரம் ஏமாற்ற முடியவில்லை'' என்று அவள் சொல்லிச் சிரித்தாள்.





# பீர் ஸ்வாமி

[தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் சொன்ன ஊறுகாய்க் கதைகளில் இது ஒன்று.]

கும்பகோணம் காலேஜில் ஐயரவர்கள் இருந்த போது ஆங்கிலம் முதலிய பாடங்களைக் கற்பிக்கும்

பேராசிரியர்களும் அவர்களும் நெருங்கிப் பழகுவார்கள். மனங்கலந்து பேசி இனிமையாகப் பொழுது போக்குவார்கள். அங்கே ஒரு நாள் பல ஆசிரியர்கள் சேர்ந்து அமர்ந்து விநோதமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ''இந்த ஊரில் டபீர் தெரு என்று ஒன்று இருக்கிறது. அதற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது? டபீரென்று அங்கே ஏதாவது வெடித்ததா? அல்லது வேறு காரணத்தால் வந்ததா?'' என்று ஒருவர் கேட்டார்.

''டபீர் ஸ்வாமி என்ற ஒரு பெரியவர் இருந்தார். அவருடைய பெயரை இட்டு வழங்குகிறார்கள். அநேகமாக அவர் மகாராஷ்டிரராக இருந்திருப்பாரென்று தோன்றுகிறது'' என்று வேறு ஓர் ஆசிரியர் விடை கூறினார்.

முதலில் கேள்வி கேட்டவர் தொடர்ந்து, ''அப்படியானல், அந்தப் பெயர் அவருக்கு மாத்திரம் எப்படி வந்தது?'' என்று வினவினார்.

அந்த வினவிற்கு ஒருவரும் பதில்சொல்லவில்லை. சிறிது நேரம் கழித்து அங்கிருந்த ஆர். வி. ஸ்ரீநிவாசையர் என்ற பேராசிரியர் சிறிது கனைத்துக்கொண்டு, ''நான் சொல்லட்டுமா?'' என்று கேட்டார். கேட்கும்பொழுதே அவர்பால் தோன்றிய புன்னகை அவர் ஏதோ வேடிக்கையாகச் சொல்லப் போகிறார் என்பதைக் குறிப்பித்தது.

''சொல்லுங்கள், கேட்கலாம்'' என்று ஆசிரியர் யாவரும் ஒரு முகமாகக் கேட்டார்கள்.

ஸ்ரீநிவாஸையர் சொல்ல ஆரம்பித்தார்.

**த**ஞ்சாவூரில் மகாராஷ்டிர அரசர்கள் ராஜ்ய பாரம் நடத்தி வந்த போது அவர்களுடைய உறவி னர்கள் பலர் அந்த ஊரில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு அரண்மனையிலிருந்து ஊதியம்கிடைத்து வந்ததோடு, இயல்பாகவே பொருள் உடையவர் களாகவும் இருந்தார்கள்.

இவ்வாறு வாழ்ந்து வந்த மகாராஷ்டிர கன வான்களுள் ஒருவர் மிகவும் சுறுசுறுப்புடையவர். அவருடைய வாழ்க்கைக்குப் போதிய வசதிகள் இருந்தாலும் அவரது சுறுசுறுப்புக்கு ஏற்ற வேலை இல்லாமையால் அவருக்கு உற்சாகம் குறையத் தொடங்கியது. அவருடைய மனைவியும் பிறரும் அரண்மனை உத்தியோகம் பெற்றுப் பார்க்கும்படி சொன்னார்கள். அரண்மனை வேலைக்கு ஏற்ற தகுதி அவரிடம் இல்லை. சாமானிய வேலைகளுக்குப் போக வும் அவருக்கு இஷ்டம் இல்லை.

இந்த நிலையில் அவர் தீவிரமாக யோசனை செய்ய லானார். தம் கைப்பொருளைச் செலவு செய்தாவது ஏதேனும் உத்தியோகம் செய்யத்தான் வேண்டு மென்ற உறுதி அவருக்குள்ளே தோன்றியது. என்ன உத்தியோகம் செய்வது? யோசித்து யோசித்துப் பார்த்தார். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு நாளில் இருபத்து நாலு மணி நேரமும் வேலை செய்தாலும் செய்யும்படியான உத்தியோகம் ஒன் றைத் தாமே ஏற்படுத்திக் கொள்ள எண்ணிவிட் டார்.

அரண்மனைக்குப் போகும் சாலையில் அரண் மனைக்குச் சிறிது தூரத்தில் பரந்த வெளியாக இருந்த இடத்தில் ஒருபகுதியை விலைக்கு வாங்கினார். அங்கே ஒரு சிறிய கட்டிடம் கட்டிக் கொண்டார். நாற்காலி, மேஜை, பேனா, பென்சில், மைக்கூடு, காகிதங்கள், குறிப்புப் புத்தகங்கள் முதலிய உப கரணங்களெல்லாம் தம் கைப் பொருளைச் செலவு செய்து வாங்கி நிரப்பி, அதைத் தம்முடைய உத்தி யோகசாலையாக ஆக்கிக் கொண்டார். நல்ல நாளில் நல்ல வேளையில் சம்பளமில்லாத அந்த உத்தியோ கத்தைப் பார்க்கத் தொடங்கினார். சம்பளம் இல்லாவிட்டால் என்ன? அவருக்குப் பணம் இல் லையா? உத்தியோகம் செய்கிறோம் என்ற உற்சாக மும், சோம்பேறியாகப் பொழுதைப் போக்காமல் சுறுசுறுப்பாக இருக்கிறோம் என்ற திருப்தியுமே அவ ருக்கு ஊதியமாயின.

தினந்தோறும் காலையில் எட்டு மணிக்கு அவர் நல்ல உடைகளை அணிந்து கொண்டு போய்விடுவார். உணவு கொள்ள வேண்டிய வேளைகளில் வீட்டுக்குப் போய் வருவார். இல்லையானால் அந்த இடத்திற்கே உணவை வருவித்துக் கொள்வார். இரவு எட்டு ஒன்பது மணி வரையில் தம் 'உத்தியோக'த்தை பார்ப்பார். பிறகு காரியாலயத்தைப் பூட்டிக் கொண்டு போய்விடுவார். சில நாட்கள் உற்சாக மிகுதியில் இரவு நேரங்களிலும் அங்கே தங்கிவிடுவது உண்டு.

அது என்ன உத்தியோகம்? சரியானபடி வேலை வாங்கும் உத்தியோகந்தான். சோம்பலில்லாமல்

ஒவ்வொரு நிமிஷமும் ஜாக்கிரதையாகக் கவனித்துச் செய்ய வேண்டிய காரியம். வீதி வழியாக யார் யார் போகிறுர்கள், அவர்கள் உருவம், உடை, காதில் விழுந்த பேச்சு, போகும் நேரம்-இவைகளை எல்லாம் குறித்து வரும் வேலையை அவர் யாருடைய ஏவலு மின்றி, ஊதியத்தை எதிர்பாராமல் செய்துவந்தார். சாலையில் எந்த நிமிஷத்தில் யார் வருவாரென்று கண்டார்கள்? இளைய அழகிய மங்கை ஒருத்தி போவாள்; அடுத்த கணத்தில் கிழட்டு எருமை ஒன்று அந்த வழியே ஓடும். கோபத்தோடு இருவர் பேசிக்கொண்டே போவார்கள்; தொடர்ந்து கொம்மாளம் போட்டுக் கொண்டு சில சிறுவர்கள் நடப்பார்கள். எல்லாவற்றையும் ஒன்று விடாமல் குறித்துக் கொள்ளும் கைங்கரியத்தை அந்த மகா ராஷ்டிர கனவான் செய்து வந்தார். தேதிவாரியாக, மணி வாரியாக, நிமிஷ அடைவிலே கடிகாரத்தைப் போல அவர் உத்தியோகம் பார்த்தார். எவ்வளவு பொறுப்புள்ள வேலை!

தம்முடைய உத்தியோக சாலையின் ஜன்னல் வழியே உலகத்தைப் பார்த்து, அதன் பல வேறு பட்ட போக்குகளையும் குறிப்பெடுக்கும் ஆராய்ச்சி யாளரைப் போல் அவர் வெகு சிரத்தையுடன் வேலை செய்தார். 'கலை கலைக்காகவே' என்று சொல் வார்களே, அந்த மாதிரி அந்த வேலையை வேறு பயன் எதையும் கருதாமல் செய்து வந்தார்.

அவருக்குத் தாம் செய்து வந்த உத்தியோகத் திஞல் ஏற்பட்ட உற்சாகம் கிடக்கட்டும்! அவர் வீட்

டாருக்கோ அவர் ஏதோ பொறுப்புள்ள அரண்மனை உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்ற கௌரவ புத்தி உண்டாயிற்று. ''இவர் என்ன செய்கிறார்?'' என்று அறிய எண்ணிய யாரோ சிலர் அவர் ஏகாக்கிர சித்தத்தோடு வேலை செய்வதைப்பார்த்து, குறுக்கிட விரும்பாமல் போய் விட்டார்கள். அவர் உத்தியோகம் யாதொரு தடையுமின்றி இவ்வாறு நடைபெற்று வந்தது.

ஒரு நாள் அரண்மனையில் ஒரு தங்கப் பாத்திரம் காணுமல் போயிற்று. எங்கெங்கோ தேடிப் பார்த்தார்கள்; கிடைக்கவில்லை. யார் திருடினார்கள் என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. பல வகையில் ஆராய்ச்சிசெய்து விசாரித்தபோது, அன்று மாலையில் அதை யாரோ ஒருவன் எடுத்துப் போயிருக்கிறான் என்று தெரிய வந்தது. அரண்மனைக்கு அடிக்கடி வந்து போகும் பழக்கமுடைய அவனைச்சந்தேகித்துச் சோதனை போட்டார்கள். பண்டம் அகப்படவில்லை.

யாரோ ஒருவர், ''இந்தத்துப்புத்துலங்க வேண்டுமானால் கடைசியாக ஒரு வழி இருக்கிறது. இதோ இந்தச் சாலையில் ஒரு மகாராஷ்டிரர் இருக்கிறார். அவர் ஒரு பைத்தியக்கார உத்தியோகம் பார்த்து வருகிறார். அவரிடமுள்ள குறிப்புக்களைப் பார்த்தால் நமக்கு ஏதாவது உளவு கிடைக்கலாம்'' என்று சொன்னார். அரண்மனை உத்தியோகஸ்தர்கள் அதையும் பார்த்து விடலாம் என்று எண்ணி அந்த மகாராஷ்டிர கனவானுடைய உத்தியோகசாலைக்கு வந்தார்கள்.

அவர்களை அந்தக்கனவான் வரவேற்ருர். பிறகு அவர்கள் விரும்பியபடி தம்முடைய தினக் குறிப்புக் களைக் காட்டினுர். 'ஒரு பிரயோஜனமும் இல்லாமல் வேலையற்றுப் போய் இந்த மனிதன் இப்படி எழுதிக் குவித்திருக்கிருனே!' என்று அவர்கள் எண்ணி நகைத் தனர். பிறகு தங்கப் பாத்திரம் களவு போன நாளில் எழுதியவற்றைப் பார்த்தார்கள். அன்று காலையிலி ருந்து இரவு வரையில் அந்தச் சாலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இருந்தன. பின்வரும் குறிப்பு அவர்கள் கண்ணில் பட்டது.

''மாலை ஆறரை மணி. ஒரு குட்டையான மனி தன் தன் மேல் வேஷ்டியில் எதையோ மறைத்த படியே வந்தான். அரண்மனையிலிருந்து வந்திருக்க லாம். எதிரே உள்ள சாக்கடைக்கு அருகில் உட்கார்ந் தான். உடனே 'டபீர்' என்ற சத்தம் கேட்டது; அடுத்த நிமிஷம் அவன் எழுந்து போய் விட்டான்.''

இதை வாசித்தவுடன் அரண்மனையிலிருந்து வந் தவர்கள் சாக்கடைப் பக்கம் போய் அதற்குள் 'டபீர்' என்று விழுந்த வஸ்து எதுவாயிருக்கலா மென்று தேடினுர்கள்.

என்ன ஆச்சரியம்! எதைத் தேடி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார்களோ, அந்தப் பண்டமே அதற்குள் இருந்தது. 'அரண்மனையிலிருந்து திருடிக் கொண்டு வந்தவன் அப்போதைக்கு இங்கே போட்டு வைத்திருக்கலாம். திருட்டுவிசாரணை நடந்து ஓய்ந்த பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணிப்

போட்டிருக்கிறான்' என்று ஊகித்துக் கொண்டார்கள்.

'டபீர் என்ற சத்தம் கேட்டது' என்ற குறிப்பு இல்லாவிட்டால் திருட்டுப்போன பண்டம் கிடைத்திருக்காது என்பதை எண்ணியபோது, அந்தச் சம்பளம் இல்லாத உத்தியோகஸ்தரிடத்தில் அவர்களுக்கு அபார மதிப்பு ஏற்பட்டுவிட்டது.

அவரை அரசரிடம் உபசாரத்தோடு அழைத்துச் சென்று, திருட்டுப் போன பாத்திரம் அவரால்தான் கிடைத்தது என்று சொல்லி, அவர் உத்தியோகச் சிறப்பையும் எடுத்துரைத்தார்கள். 'டபீர்' என்ற சத்தத்தைக் கவனித்துக் குறிப்பு எழுதிய அந்தக் கனவானுக்கு 'டபீர் சுவாமி' என்ற பட்டமும், ராஜ சம்மானமும் கிடைத்தன,

கதையைச் சொல்லிவிட்டு, ''டபீர் ஸ்வாமியின் வரலாறு பொருத்தமாக இருக்கிறதா?'' என்றார் ஸ்ரீநிவாஸையர்.





# அரச குமாரன் சோதனை

ஓர் அரசகுமாரன் தனக்கு ஏற்ற மனைவியைத் தானே தேடிக்கொள்ள எண்ணினான். அழகும் அறிவும் பொறுமையும் உடைய பெண் ஒருத்தியைத் தேர்ந்தெடுக்க விரும்பினான். அதற்காக அவன்

சாமான்ய மனிதனைப்போல ஆடை அணிந்து, தன் தலைநகரை விட்டுப் புறப்பட்டான்.

பல இடங்களுக்குப் போய்க் கடைசியில் ஒரு சிறிய ஊர் வழியே நடந்துகொண்டிருந்தான். அப்போது ஒரு பெண் தன் தலையின்மேல் ஒரு சட்டியில், வயலில் வேலை செய்யும் தன் தந்தைக்குக் கஞ்சி எடுத்துக்கொண்டு போனாள். அவள் இயற்கையாகவே நல்ல அழகும் பலமும் உடையவளாக இருந்தாள். 'இவள் அழகுள்ளவளாக இருக்கிறாள். இவளை யாரென்று விசாரிக்கலாம்' என்று எண்ணிய அரச குமாரன் அவளைப் பார்த்து, "ஏ பெண்ணே! உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

அந்தப் பெண், "வெண்ணெய்!" என்றாள்.

"நவநீதமா?" என்று ராஜகுமாரன் கேட்டான்

"இல்லை; சாதாரண வெண்ணெய் அல்ல. மண்ணால் பண்ணாத சட்டியிலே, மரத்தால் பண்ணாத மத்தாலே, மட்டையால் பண்ணாத கயிற்றாலே கடைந்தெடுத்தது. அந்த வெண்ணெய் இங்கே முன்பும் இல்லை; இன்றும்இல்லை; நாளைக்கும் இராது."

தேவலோகத்தில் பாற்கடலில் மேரு மலையை மத்தாகக் கொண்டு வாசுகியைக் கயிறாக வைத்துக் கடைந்த அமுதத்தை அவள் குறிக்கிறாள் என்று ஊகித்துக் கொண்டான் ராஜகுமாரன்.

"அமுதவல்லியா?" என்று பிறகு கேட்டான்.

"ஆம்" என்றாள் அந்தப் பெண்.

"யாருக்குக் கஞ்சி கொண்டு போகிறாய்?"

''என் முதல் தெய்வத்துக்கு.''

''உன் தகப்பனாருக்கா?''

''ஆம்.''

''அவர் என்ன செய்கிறார்?''

''ஒன்றை இரண்டாக்குகிறார்!''

''மண் கட்டியை உடைத்து உழுகிறாரோ?''

''ஆம்.''

''எந்த இடத்தில் உழுகிறார்?''

''போனால் வராத புன்செய்க்கு அடுத்த நன் செய்யிலே.''

''ஓகோ! சுடுகாட்டுக்கு அடுத்த நிலத்திலா?''

''ஆம், ஐயா!'' என்று மரியாதையுடன் விடையளித்தாள் அவள். ''கொஞ்சம் கஞ்சி சாப்பிடுகிறீர்களா?'' என்றும் கேட்டாள்.

''சரி'' என்று ஒப்புக்கொண்டான் ராஜ குமாரன்.

கஞ்சிச் சட்டியின் மேல் மூடியிருந்த கலயத்தை அவள் எடுத்தாள். அதில் அப்படியே கஞ்சியை ஊற்றுகிறாளா என்று கவனித்தான் ராஜகுமாரன். அதை முதலில் கழுவி விட்டுப் பிறகு அதில் கஞ்சியை ஊற்றி அவனிடம் கொடுத்தாள். ராஜகுமாரனுக்குச் சந்தோஷம் உண்டாகி விட்டது. 'இந்தப் பெண் நமக்கு மனைவியாக வாய்த்தால் மிகவும் நன்றாக இருக்கும்' என்ற ஆசை அவனுக்கு அப்போது உண்டாயிற்று.

''உன் வீடு எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான்.

‘‘பாலுக்கும் நூலுக்கும் நடுவிலே, சுட்ட கூரையும் சுடாத மதிலும் உள்ள வீடு, எங்கள் வீடு’’ என்றுள் அவள்.

‘‘பால்காரன் வீட்டுக்கும், தறிகாரன் வீட்டுக்கும் நடுவில், ஓட்டு வில்லை வேய்ந்த வீடு இவள் வீடு. அதைச் சுற்றிச் செடி நிறைந்த வேலி இருக்கும்’’ என்று உணர்ந்து கொண்டான் இளவரசன்.

அவன் உடனே அவள் வீட்டுக்குப் போய் அவளுடைய தாயோடு பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவள் வீட்டில் பெண் கொள்ளவேண்டும் என்று வந்திருப்பதாகவும், தான் மிகவும் பணக்காரன் என்றும் சொன்ஞன். அப்படிப் பேசிக் கொண்டிருந்த போது வயலுக்குக் கஞ்சி கொண்டு போன அமுதவல்லி திரும்பி வந்துவிட்டாள்.

‘‘மாமி, மாமி, உங்கள் பெண்ணை இன்று சமையல் செய்யச் சொல்லுங்கள். நான் பணம் தருகிறேன். வேண்டியதை வாங்கி, வேண்டியபடி செய்யச் சொல்லுங்கள். ஒரு பிள்ளைக்காரியைக் கறி பண்ணி, பாவாடைக்காரியைக் குழம்பு பண்ணி, பாண்டியன் தேவியை ரசம் பண்ணி எனக்கு விருந்திட வேண்டும்’’ என்ருன்.

அமுதவல்லி, ‘‘அப்படியே செய்கிறேன்’’ என்று சொல்லி, வேண்டிய காய்கறிகளைத் தன் தாயைக் கொண்டு வாங்கி வரச் சொன்ஞள்; சமையல் செய்து பரிமாறிஞள்.

ஒரு தாறு மாத்திரம் போடும் வாழையின் காயைக் கறி பண்ணியிருந்தாள். கத்திரிக் காயைக்

குழம்பு பண்ணினுள். பாண்டியனுக்கு மாலையிடும் வேப்பம் பூவால் ரசம் பண்ணியிருந்தாள்.

அரசகுமாரன் சாப்பிடும் போது ரசத்தை அவள் மீது துப்பினுன். அவள் கோபம் கொள்ளாமல் பரிமாறினுள். சோற்றை வாரி இறைத்தான். அவள் அப்போதும் கோபம் கொள்ளவில்லை. அவள் பொறுமைசாலி என்பதை அப்போது உணர்ந்து கொண்டான்.

''நான் போய் வருகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டுச் சென்றுன், அரசகுமாரன். பிறகு சில உறவினர்களுடன் வந்து அமுதவல்லியைக் கல்யாணம் செய்து கொண்டான். அப்போதும் தான் ராஜகுமாரன் என்று அவன் சொல்லவில்லை. திருமணம் முடிந்தவுடன் அவளை அங்கேயே விட்டு விட்டுப் போனுன்.

ஒரு நாள் நாலைந்து சேவகர்களை அமுதவல்லியிடம் அனுப்பி, ''இந்த நாட்டு ராஜகுமாரன் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளஆசைப்படுகிறுன்'' என்று சொல்லச் சொன்னுன். அவள், ''நான் முன்பே கல்யாணம் ஆனவள்'' என்றுள்.

''ஆனுலும் குற்றம் இல்லை; உன் அழகைக் கண்டு அவர் ஆசைப்படுகிறுர். ஆடை ஆபரணம் எல்லாம் நிறையத் தருவார்'' என்றுர்கள்.

அவள் முதலில் சாந்தமாக மறுத்தாள். வரவர அவர்கள் அதிக ஆசை காட்டினுர்கள். அவள் புலி போலச் சீறி விழுந்தாள். கடைசியில் சேவகர்கள் அவளைக் கயிற்றினுல் கட்டிக்கொண்டு போனுர்கள்.

ராஜகுமாரன் மாணிக்கக் கிரீடமும் பொன்னு

டையும் புனைந்து சிங்காதனத்தில் வீற்றிருந்தான். எங்கும் ஒரே பிரகாசமாக இருந்தது. அவனுக்கு முன்னே அமுதவல்லியைக் கொண்டு போய் நிறுத்தினார்கள். அவன் அவள் முகத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சிங்காதனத்தையும் அவன் அரசக் கோலத்தையும் அவள் கண்டாள். அவன் முகத்தை உற்றுக் கவனித்திருந்தால் அவனே தன் கணவன் என்று உணர்ந்திருப்பாள். ஆனால் கவனிக்கவில்லை. உத்தமி அல்லவா?

அவள் சற்றே புன்னகை பூத்தாள்; பிறகு அழுதாள்.

அரசகுமாரன், ''இதென்ன? வெயிலும் மழையும் தொடர்ந்தாற்போல் வருகின்றனவே!'' என்று தன் குரலை மாற்றிக்கொண்டு கேட்டான்.

அமுதவல்லி, ''ஆம்; உம்முடைய ராஜ வைபோகத்தைக் கண்டு, நீர் முற்பிறப்பில் புண்ணியம் செய்தவர் என்று எண்ணிச் சிறிதே நகைத்தேன். ஆனால் இப்பிறப்பில் மற்றொருவன் மனைவியை விரும்பும் பாவத்தில் அடுத்த பிறவியில் என்ன ஆவீரோ என்று அஞ்சி அழுதேன்'' என்றாள்.

''கயிற்றை அவிழுங்கள்'' என்று அரசகுமாரன் தன் இயற்கையான குரலில் சேவகர்களுக்கு உத்தரவிட்டான். அமுதவல்லி நிமிர்ந்து பார்த்தாள்.

''என்ன பார்க்கிறாய்? உன்னைப் பல வகையிலும் சோதித்த உன் புருஷன்தான் நான்'' என்றான் அரசகுமாரன்.

அமுதவல்லி ஆசையோடு அவன்முன் சென்று அவன் திருவடிகளை வணங்கினாள்.

